கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த

தமிழ்ப் பேரறிஞர்

# பொ. சங்கரப்பிள்ளை அவர்களின்

# 88வது பிறந்தநாள் நினைவு வெளியீடு


பதிப்பாசிரியர்

**தமிழவேள் இ. க. கந்தசுவாமி**

கொழும்புத் தமிழ்ச் சங்க முன்பொதுச் செயலாளர்

*1975 — 1996*


*29 — 12 — 2001*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த

தமிழ்ப் பேரறிஞர்

## பொ. சங்கரப்பிள்ளை அவர்களின்

# 88வது பிறந்தநாள்

# நினைவு வெளியீடு

பதிப்பாசிரியர்


தமிழவேள் இ. க. கந்தசுவாமி

கொழும்புத் தமிழ்ச் சங்க முன்பொதுச் செயலாளர்

1975 — 1996


29 — 12 — 2001


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தமிழ்ப் பேரறிஞரின்
88வது பிறந்த நினைவு நாள் 29 — 12 — 2001.


பதிப்பாசிரியர் நிதி உதவியால் வெளியிடப்பெற்றது.
முதற் பதிப்பு : 29 — 12 — 2001

அச்சுப்பதிப்பு :
ரெக்னோ அச்சகம். 581 2/1. காலி வீதி. கொழும்பு — 6.

இதனை நன்கு அச்சிட்டு உதவிய
ரெக்னோ அச்சக அதிபருக்கு எமது நன்றி

— பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்ச்சங்கப் புரவலர், தமிழ்ப்பேரறிஞர்
பொ. சங்கரப்பிள்ளை அவர்கள்
தமிழ்ச்சங்கத்திற்குப் பெரும் நிதிக்கொடை வழங்கியவர்.
கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் 1981 — 1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. தமிழ்ப்பேரறிஞர் பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் உருவப்படம்

2. பதிப்பாசிரியர் உரை

3. தமிழ்ப்பேரறிஞர் தலைமையுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவராக இருந்த தமிழ்ப்பேரறிஞர் பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் 88வது பிறந்தநாள் நினைவு வெளியீடு

### பதிப்பாசிரியர் உரை

தமிழ்ப்பேரறிஞர் பொ. சங்கரப்பிள்ளை அவர்கள் வரலாற்றுப் புகழ் உள்ள மாவிட்டபுரத்தில் கி. பி. 1913 நவம்பர் 29ஆம் நாள் பிறந்தார். சைவப் பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரனார் அதிபராக இருந்தபோது சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கற்றார். கலை, அறிவியல் இரு துறைகளிலும் உயர் புலமை பெற்றவர். அரசு சேவையிலும் சொல்லாக்கத் துறையிலும் பணிபுரிந்தவர். வித்தியோதய பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராகவும் இருந்தார். தமிழ்ப் புலமையும் பற்றும் உள்ள இவர் 1950 ஆம் ஆண்டில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஆயுள் உறுப்பினர் ஆனார். 1975 இல் இச்சங்கத்தின் பொதுச்செயலாளராகிப் பல்துறைப்பணிகளை மேற்கொண்டபோது எமது வேண்டுதலை உவந்து ஏற்று இச்சங்கத்தின் துணைத்தலைவர்களுள் ஒருவரானார். 1981-83 ஆண்டுகளிற் சங்கத்தலைவர்ப் பொறுப்பேற்று இச்சங்க வளர்ச்சிக்குப் பல துறைகளிலும் உதவினார். சங்கக் கொடுப்பனவுகளைக் காசோலை மூலம் மேற்கொள்ளும்படி செய்தார். மாணவர்க்கும், வயது வந்தவர்க்கும் நடைபெற்று வந்த பல்துறைத் தேர்வுகள் தொடர்ந்து நடைபெறுவதற்காகப் பேரறிஞர்களின் பெயரில் பரிசில் நிதியங்களை வங்கிகளில் வைப்புச் செய்து வட்டிப்பணத்தைப் பரிசில்கள் வழங்க வகை செய்தார். கட்டிட நிதி சேர்த்தற்குத் தமது ஊர்தியைத் தந்து உதவினார். நாள்தோறும் சங்கத்திற்கு வந்து சங்கப்பணிகள் நன்கு நிகழ உதவினார். தமது பெயரிலும் தமது மனைவி பெயரிலும் மகன் அசோகன் பெயரிலும் பரிசில்கள் வழங்க நிதி உதவினார். தலைவர்ப் பதவியின் நீங்கி. அ. ஐ. நாட்டில் இருந்தபோது சங்கப் பொதுச் செயலாளராகிய எம்மோடு தொடர்பு கொண்டு சங்கப் பணிகளை ஊக்குவித்தார். தமக்குப் பின் தமது பிள்ளைகள் சங்கப் பணிகளுக்கு உதவுவர் என எழுதினார்.

இதனால் சங்க முற்பகுதிக் கட்டிட வேலை நிறைவாகியதும் பிற்பகுதிக் கட்டிட வேலைக்கு உதவும்படி இவரது பிள்ளைகளுக்குத் தெரிவித்தபோது தாங்கள் நிதி உதவுவதாகவும் இந்நிதியால் அமையும் பகுதிக்குத் தம் தந்தையின் பெயர் இட வேண்டும் எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்தனர். இதற்கு ஆட்சிக்குழு அனுமதி வழங்கியது. எதிர்பார்த்தற்கு மேலாகப் பெரும் நிதியை - 30 இலட்சம் ரூபாவுக்கு மேல்- இவர்கள் வழங்கினர். இந்நாட்டில் எவர்களும் இவர்களைப் போல் பெரும் நிதியை இச்சங்கத்திற்கு வழங்கியவர்கள் இலர். ஒருவர் மட்டும் மகிழ்நன் நம்பி நடராசா - இச்சங்கத்துத் தலைவராய் இருந்த கலாநிதி க. செ. நடராசா அவர்களின் மகன் - ஓர் இலட்சம் ரூபா வழங்கினார். இந்நாட்டில் தமிழ்ச்சங்கம் ஒன்றிற்கு இத்துணைப் பெரு நிதியை வழங்கிய பெருமை இவர்களுக்கே உரியது. இவர்கள் மருத்துவத்துறைப் பணி புரிபவர்கள். பெரும் வணிகத்துறைத் தொழில் புரிபவர்கள் அல்லர். இவர்களது தந்தையின் அறிவுத்தலும் தமிழ்ச்சங்கத்தில் உள்ள பற்றுதலுமே இப்பெரு நிதி வழங்கக் காரணங்கள் ஆகும். இவர்களது இப்பெரும் நிதி உதவியால் சங்கக்கட்டிடம் நிறைவு பெற்று விளங்குகிறது. இவர்களது விருப்பத்தின் படி இச்சங்கச்சிறப்பு நூலகம் இப்புதிய கட்டிடத்தில் அமைந்துள்ளது. இவர்களது நிதி உதவியினால் இச்சங்க நூலகம் புதிய தளபாடங்களைப் பெற்று உள்ளது. இவர்களது இப்பெரும் நிதி உதவியால் இச்சங்கக் கட்டிடமும் நூலகமும் நிறைவு பெற்று இந்நாட்டில் உள்ள அனைவர்க்கும் இன்று பெரும்பயன் தருகின்றன. இவர்களுக்கு இச்சங்க ஆட்சிக்குழு வழங்கிய உறுதி மொழியின்படி கட்டிடத்திற்கும் நூலகத்திற்கும் இவர்களது தந்தையார் பெயர் இடப் பெற்றிருக்கின்றது. இத்தமிழ்ப்பேரறிஞரின் பெரிய திருவுருவப்படம் நூலகத்தில் இடம் பெற்றுள்ளது.

பொ. சங்கரப்பிள்ளை அவர்கள் சிறந்த தமிழறிஞர். சிறந்த ஆராய்ச்சி அறிஞர். ஆகவே நாம் தமிழர், சைவ சித்தாந்தம், கல்யாணப் பொருத்தம், மரணத்தின் பின், பொருளாதாரப் பெறுமதிக்கோட்பாடு ஆகிய சிறந்த ஐந்து நூல்களை எழுதியுள்ளார். நாம் தமிழர் கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடாக வந்துள்ளது. ஏனையவை தமிழக வெளியீடுகள். இவர் தம் சிந்தனையாலும், சொல்லாலும் செயலாலும் தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் இச்சங்கத்திற்கும் இந்நாட்டுக்கும் பெரும்பணிகள் செய்து இந்நாட்டின் நற் தமிழ்ப் பேரறிஞராக விளங்கும் இவரின் பெயர் இந்நாட்டில் தனித்துவம் பெற்று விளங்கும். இச்சங்கத்தின் கட்டிடத்திற்கும் நூலகத்திற்கும் அமைந்தது பெரும் பேருவகை தருவதாகும்.

கடந்த ஆண்டு இவரின் 87வது பிறந்தநாள் நினைவாக இவரின் வரலாறும் பணிகளும் என்னும் நூல் வெளியிடப் பெற்றது. இவர் இச்சங்கத்தின் தலைவராக இருந்த போது இவர் நிகழ்த்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையுரை இவரின் பெரும் உயர் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக உள்ளது. இவை இச்சங்கத்தினதும் தமிழினத்தினதும் இந்நாட்டினதும் வருங்கால வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பெரும் பயன்கள் தருவனவாகும். இதனாலேயே இவ்வாண்டு இவரின் 88வது பிறந்தநாள் நினைவாக இத்தலைமையுரை வெளியிடப் பெற்றுள்ளது. இச்சங்க உறுப்பினர்களும் இந்நாட்டின் தமிழ் ஆர்வலர்களும் இவைகளை அறிந்து இச்சங்கத்தினதும் இந்நாட்டுத் தமிழினத்தினதும் இந்நாட்டினதும் உயர்வுக்கும் சிறப்புக்கும் உதவுபவர்கள் ஆகுக. இவர்களது பெரும் நிதிக் கொடை இந்நாட்டின் வரலாற்றில் சிறப்பு மிக்க ஒன்றாகும். இவரது நூல்கள் சில ஆங்கிலத்தில் வெளிவரும்.

இத்தமிழ்ப் பேரறிஞரின் மனைவியார் திருமதி. மனோன்மணி சங்கரப்பிள்ளை அவர்கள் தம் கணவரைப் போல் இச்சங்க வளர்ச்சியில் மிக ஆர்வம் உள்ளவராய்க் கடிதங்கள் மூலம் எம்மை ஊக்குவித்து வருகிறார். இப்பெரு நிதி கிடைத்"தற்கு உறுதுணையாக விளங்குகினார். இச்சங்கத்திற்குப் பெருநிதி வழங்கிய இத்தமிழறிஞரது புதல்வர்கள் டாக்டர் சந்திரமோகன், டாக்டர். மகேந்திரன், டாக்டர் அசோகன், டாக்டர் மனோகரன் ஆகியவர்களுக்கும், புதல்வியர் ஜெயந்தி, மனோகரி ஆகியவர்களுக்கும் இதற்கு உறுதுணையாக உதவிய திருமதி. மனோன்மணி சங்கரப்பிள்ளை அவர்களுக்கும் இச்சங்கத்தினதும் இந்நாட்டுத் தமிழ் மக்களதும் பெரும் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன். இந்நிதிக்கொடை தொடர்பாக 29-12-2001 ஆம் நாள் இச்சங்கத்தில் சிறப்பு நிகழ்வு நிகழ உள்ளது. இந்நிகழ்வுக்கு இத்தமிழறிஞர்களது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் வருகை தந்து சொற்பொழிவு, இசை, நடனம் ஆகிய நிகழ்ச்சிகளை வழங்க உள்ளனர் . இவர்களது வருகையையும் இவர்கள் வழங்கும் நிகழ்ச்சிகளையும் உளம் உவந்து வரவேற்கின்றேன். இத்தமிழ்ப் பேரறிஞரின் தமிழ்ப்பணிகளும் இவரது பிள்ளைகள் வழங்கிய பெரும் நிதிக்கொடையும் உலகம் உள்ளளவும் நின்று நிலைவுக. இறை திருவருள் என்றும் துணை செய்க.

**தமிழவேள் இ. க. கந்ததசுவாமி**
கொழும்புத் தமிழ்ச்சங்க
முன்னாள்பொதுச் செயலாளர்
1975-96

7, 57ம் ஒழுங்கை,
கொழும்பு-6
29-12-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவள்ளுவர் ஆண்டு கார்த்திகை மாதம் 20ம் நாள் (05-12-81) நடைபெற்ற கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் 39ம் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தலைவர் பொ. சங்கரப்பிள்ளை அவர்கள் நிகழ்த்திய தலைமை உரை

தமிழ்ச்சங்கதத்தின் இவ்வாண்டுப் பொதுக்கூட்டத்துக்கு கௌரவ அமைச்சர் இராசதுரை அவர்களைப் பிரதம மேன்மை தங்கிய அதிதியாக நாம் அழைத்திருப்பது பொருத்தமுடையதாகும். இவர் தமிழில் ஆழ்ந்த புலமையுடையவர், தன்னேரிலாப் பேச்சாளர். தமிழகத்துக்குக் கருணாநிதி போன்று ஈழத்துக்கு இராசதுரை என்பர். பிரதேச அபிவிருத்தித் தமிழ் மொழி அமுலாக்கல், இந்துசமயப; பண்பாடு முதலிய துறைகளுக்கு இவர் அரசாங்க அமைச்சர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் கொழும்பில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார்கள் பலரினால் 1942இல் நிறுவப்பட்டது. இது சாதி சமய வேற்றுமைகளும் அரசியல் தொடர்பும் அற்ற தாபனமாகும். தமிழர் கலைகள், பண்பாடுகளைப் பேணுவதும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பல வழிகளில் உழைப்பதும், உறுப்பினரின் கல்விநிலை செம்மையுறுதற்கேற்ற வாய்ப்புக்களை அளிப்பதும் சங்கத்தின் நோக்கங்களாகும். இன்று சங்கம் அடைந்திருக்கும் உயர்நிலைக்குக் காரணம் பல வள்ளல்களின் நன்கொடைகளும், பல தொண்டர்களின் அயராத உழைப்புக்களுமாம். இவர்கள் யாவருக்குஞ் சங்கத்தின் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

தமிழ் மொழியின் சிறப்புக்கள் பற்றிப் பலர் அழகாக மேடைகளிற் பேசுகிறார்கள். அடுக்கு மொழி, உடன் மறந்து விடுகிறார்கள். பேச்சுக்களிற் பயனுண்டா? ஒரு தொன் சொற்களைப் பார்க்கிலும் ஒரு துளி செயல் மேலானது. ''எனது சமூகத்தின் மொழியின் வளர்ச்சிக்கு அற்பமாவது உதவியிருக்கிறேனா? எனது கடமையைச் செய்தேனா?'' என ஒவ்வொரு தமிழனும் தன்னைத்தானே கேட்கவேண்டும். இன்றே கேளுங்கள், தவறாது கேளுங்கள். ''நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு வாழ்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றோ? சொல்வீர்?'' என்று பாரதி அன்று முழங்கினான். ஆதலால், இம்மேடையிலிருந்து ஓர் அழைப்பு விடுகிறேன். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உழைக்க முன்வாருங்கள். தமிழ்ச் சங்கத்திற் சேருங்கள். எங்கள் பணிகளிற் பங்குபற்றுங்கள். இப்பணிகளை நாடு முழுவதும் பரப்புங்கள். விண்ணப்பப் பத்திரங்கள் இங்கு உள. எடுத்து நிரப்பி ஆயுள் உறுப்பினராகுங்கள்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம், மதுரைத் தமிழ்ச் சங்கம் போன்று அமைந்துள்ளஇடத்தின் பெயரைக் கொண்டுள்ளது. ஆனால் உண்மையில் இஃது இலங்கைத் தமிழ்ச் சங்கமாகும். தமிழ்மொழி, கலாசாரம், முதலியவற்றின் வளர்ச்சிக்காக இலங்கை முழுவதும் பணியாற்றுகிறது. உலகத் தமிழர் கலாசாரப் பணிகளிலும் பங்கு கொள்ள விரும்புகிறது. ''கொழும்பில் மட்டும் கூட்டங்கள் நடத்துவது போதாது. சங்கப் பணிகள் நாடு முழுவதும் - விசேடமாக வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் பரவ வேண்டும்'', என எமது அமைச்சர் முன்பு நடந்த சங்க நாள் விழாவிற் கூறினார். இதை நாம் மறந்து விடவில்லை. அடுத்த அடுத்த ஆண்டுகளிற் சங்கப் பணிகள் ஏனைய இடங்களுக்கும் பரப்பப்படும். அதே வேளையில் வடக்கில் ஒரு தமிழ்ச் சங்கமும் கிழக்கில் ஒரு தமிழ்ச் சங்கமும் , மலையகத்தில் ஒரு தமிழ்ச் சங்கமும், நிறுவ அவ்வப்பகுதி மக்களும், தலைவர்களும் விரைவில் ஆவன செய்வார்களென நம்புகிறேன்.

தமிழ் மொழியைத் தேசிய மொழியாக அமுலாக்கவும், இந்து மத கலாச்சாரத்தை வளர்க்கவும் மாட்சிமை தங்கிய சனாதிபதி கௌரவ அமைச்சர் இராசதுரை அவர்களை நியமித்திருக்கிறார். மாட்சிமை தங்கிய சனாதிபதிக்கு எமது நன்றியைத் தெரிவிக்கிறோம். சனாதிபதி எமக்கு அறியாதவரல்லர். பலகாலம் இவரை நாம் தெரிவு செய்து அனுப்பியிக்கிறோம்.

இத் தொடர்பில் ஒரு முக்கியமான விடயத்தை அமைச்சரினதும் அரசாங்கத்தினதும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழ் மக்களின் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் தமிழிற் செய்யப்பட வேண்டுமெனச் சென்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மாட்சிமை தங்கிய சனாதிபதிக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அனுப்பினோம். அமைச்சர்களை நேரிற் கண்டும் எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டங்களை எடுத்துக் கூறினோம். தமிழ் மக்கள் பெருந் தொகையாக வாழும் கொழும்பு மாவட்டத்தில் முதலில் இதைச் செயற்படுத்துமாறு கேட்டோம். மேலதிகச் செலவில்லாது இதைச் செயற்படுத்த வழிவகைகளையும் எடுத்துக்காட்டினோம். அமைச்சர்கள் எமது வேண்டுகோளைச் செயற்படுத்தப் போவதாகத் தினசரிகளிற் செய்திகள் வெளிவந்தன. ஆனால் அரசாங்கம் இதுபற்றி எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை சட்டத் தடைகள் இருக்கலாம். அவ்வாறாயின் சட்டத்தைத் திருத்தி எமது வேண்டுகோளை நிறைவேற்றித் தருமாறு அரசாங்கத்தையும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் மறுபடியும் வேண்டிக் கொள்கிறோம்.

சங்கத்தின் பணிகளை ஆண்டறிக்கை கூறுகிறது. முக்கியமான ஒன்றிரண்டு விடயங்களைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஆண்டறிக்கையின் பக்கத்திற் சங்கத்தின் வழக்கைப் பற்றிய ஒரு குறிப் பைக் காணலாம். கொழும்புத் தமிழ்ச் சங்கமா, வழக்கா எனச் சிலர் ஆச்சரியப்படலாம். இவ்வழக்கின் விவரங்களைக் கூற நான் விரும்ப வில்லை. பழைய ஆட்சிக் குழு ஒன்றில் இருந்த சிலரின் பொறுப் புணர்ச்சி அற்ற தவறான செயலினாலும் சிலரின் சூழ்ச்சியினாலும் இவ்வழக்கு ஏற்பட்டது. இவ்வழக்கினால் அதிருப்தியடைந்த பலர் சங்கத்தை விட்டு விலகினர், சங்கப் பணிகளும், வளர்ச்சியும் தடைப்பட்டன. இவ்வழக்கு இல்லாதிருந்தால் சங்கக் கட்டடங்கள் முழுவதையும் இதுவரை கட்டி முடித்திருக்கலாம். இன்று 3/4 பகுதியை மட்டுமே கட்டி முடித்திருக்கிறோம். கட்டடச் செலவுகள் நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகரித்து விட்டன. இவ்வழக்கினாற் சங்கம் அடைந்த நட்டம் பல இலட்சம் ரூபாய்களாகும். மேல் முறையீட்டு மன்றத்திற் சங்கத்தின் சார்பில் இலவசமாக ஏற்பட்டு அதிக சிரமம் எடுத்து வழக்கிற் சங்கத்துக்கு வெற்றியீட்டித் தந்த எமது காப்பாளர் திருவாளர் சி. இரங்கநாதன், கியூ. சி. அவர்களுக்குச் சங்கம் என்றும் கடமைப்பட்டுள்ளது. அன்னாருக்கு எமது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இப்படிப்பட்ட ஆட்சிக்குழுத் தவறுகளும், தனியார் சூழ்ச்சிகளும் இனிமேல் நடைபெறாது தடுப்பதற்குச் சென்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்திற் சங்க அமைப்பு விதிகளைத் திருத்தி ஓம்படையாளர் சபை ஒன்றை நிறுவ முடிவு செய்தோம். சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர் ஐவரும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவர். இனிமேற் சங்கச் சொத்துக்களை நிருவகிப்பது இச்சபையின் கடமையாகும். இத்தொடர்பிற் கௌரவ அமைச்சரின் கவனத்திற்கு ஒரு விடயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். கோயில்கள், தர்மத்தாபனங்கள், கலாசார நிலையங்கள் முதலியனவற்றின் சொத்துக்களைச் சிலர் அபகரிப்பதும், சிலர் அபகரிக்க எத்தனிப்பதும் ஆட்சிக்குழுக்களின் அங்கத்தவர் சிலர் இவற்றைத் தமது நன்மைக்குப் பயன்படுத்துவதும் எமது சமுதாயத்திலுள்ள சாபக் கேடுகளில் ஒன்றாகும். இஃது எமது சமூகத்திற்கே அவமானம். சட்டத்திலும் இச்சொத்துக்களுக்குப் போதிய பாதுகாப்பில்லை. இன்று தமிழ்மொழி, இந்து மதக் கலாசாரம் என்பவற்றுக்குத் தனிப்பட்ட அமைச்சு ஒன்று நிறுவப்பட்டிருப்பதனால் இவ்வமைச்சு இச்சொத்துக்களுக்குப் போதிய பாதுகாப்பளிக்கச் சட்டங் கொண்டுவர வேண்டும்.

சங்கத்தின் பணிகளில் ஒன்று புதிய பழைய தமிழ் நூல்களை அச்சேற்றி வெளியிடுவதாகும். இதுவரையும் சங்கம் வெளியிட்ட நூல்களாவன, பாவலர் சரித்திரம் (1ம் 2ம் பாகங்கள் வெளிவந்துவிட்டன, 3ம் பாகம் வெளிவரவிருக்கிறது). வையா பாடல், புவியியல், சிறுவர் மலர், எழுத்தாளரை ஊக்குவிக்கும் பொருட்டுச் சங்கஞ் சில நூல்களுக்கு விதப்புரை வழங்கியிருக்கிறது. 17ஆம் 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் ஈழத்தில் வெளிவந்த பல தமிழ் நூல்கள் இன்று மறைந்து விட்டன. இவற்றைத் தேடி எடுத்து அச்சேற்ற வேண்டும். தமிழில் நாவன்மை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்துகிறோம். பரிசில்கள் வழங்குகிறோம். ஆராய்ச்சி அரங்குகள் இங்கு நடைபெறுகின்றன. ஆராய்ச்சிக் கட்டுரைகள் வாசிக்கப்படுகின்றன. அடுத்த ஆண்டில் வெளியிடுவதற்கு எம்மிடம் பல நூல்களும், கவிதைகளும், கட்டுரைகளும் உள. பணமின்மையே இம்முயற்சிக்குத் தடையாகும். ஆதலால் இந்நூல்களை வெளியிடுவதற்கு உதவி செய்யத் தமிழ் வள்ளல்கள் முன்வர வேண்டும்,

ஆனோல்ட் சதாசிவம் பாவலர் சரிதைகள் 1875 உடன் முடிவடைகின்றன. சென்ற 100 வருடங்களில் ஈழத்திற் பல புலவர்களும் தமிழ் அறிஞர்களும் இருந்தனர். இவர்களுடைய சரிதைகளையுஞ் சுருக்கமாக எழுதி வெளியிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப்பற்றி எமது அமைச்சருடன் கதைத்தபோது இப்பொறுப்பை அவருடைய அமைச்சே ஏற்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டோம். சென்ற 100 ஆண்டுகளில் ஈழத்தில் வாழ்ந்த புலவர்களைப்பற்றி அறிந்தவர்கள் அப்புலவர்களின் சரிதைகளை மிகச் சுருக்கமாக எழுதித் தமிழ்ச் சங்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

சிறுகதைகள், சினிமாக்காரரைப்பற்றிய செய்திகள், சிரிப்புக்கள், கண்டனங்கள், அரசியல் நூல்கள் தவிர்ந்த ஏனைய தமிழ் நூல்களை இங்கு வெளியிடுவோர் நட்டமடைவது திண்ணம். மேலும் எமது நாட்டு மக்களுக்கு இறக்குமதிகளில் மோகமுண்டு, கஞ்சலாயினும் பிறநாட்டுப் பொருட்களை விரும்புவர், உள்நாட்டுச் சரக்குக்கு மதிப்பில்லை. தமிழர் பொற்காலம் எனப்படும் சங்க காலத்தில் பேரரசர்களுஞ் சிற்றரசர்களும் தமிழ்ப் புலவர்களையும், அறிஞர்களையும் ஆதரித்தனர். சங்ககாலத்துக்குப் பின்னும் இவர்கள் அரசரின் ஆதரவைப் பெற்றனர், இந்நாட்டில் தமிழ்ப்புலமையை ஊக்குவிக்கவும் வளர்க்கவும் வேண்டுமானால் தமிழ்ப் புலவர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் ஆதரவும், உதவியும் அளிக்க வேண்டும்.

''புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை''

என அன்று பாரதி வருந்தினார். இன்று இக்குறைபாடு ஓரளவுக்கு நீங்கிய போதிலும் நாம் அதிக முன்னேற்றம் அடையவில்லை. மொழி பெயர்ப்பு சொல்லாக்கத் துறைகளிலும் பல பிரச்சினைகள் தோன்றிவிட்டன. மொழிபெயர்ப்பாளன் ஒவ்வொருவனும் சொல்லாக்குவோனானாற் பெருங்குழப்பமே விளைவாகும். இதைப்பற்றி மேலும் கூற நான் விரும்பவில்லை. அடுத்த ஆண்டிற் சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு முதலியவை பற்றி ஆய்வரங்குகள் நடத்தவிருக்கிறோம். இவற்றிற் பங்கு பற்றிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு இத்துறைகளில் வல்லுநரை அழைக்கிறேன். மேலும் அரச கரும மொழித் திணைக்களத்தின் தமிழ்ச் சொல்லாக்கப் பகுதி தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சிற்கு மாற்றப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சின் வெள்ளை அறிக்கை பெரும்பாலும் வரவேற்கத்தக்கதாகும். எமது இளங்கல்வி அமைச்சரைப் பாராட்டுகிறோம், பாடசாலைக் கொத்தணி கொள்கையளவிற் சிறந்தது, போலத் தோன்றினும், நடைமுறையிற் பல பிரச்சினைகளுக்குக் காலாகும். தமிழ்ப் பிள்ளைகளுக்கு மரபு முறைப்படி தமிழ் கற்பிக்கப்பட வேண்டும். பழைய இலக்கிய இலக்கண நூல்களைப் பயன்படுத்த வேண்டும். தற்கால விநோத விளையாட்டு முறைகளும் சுருக்க வழிகளும் வேண்டாம். அந்நிய மொழியினருக்குத் தமிழைக் கற்பிப்பது போன்று தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்பிக்க வேண்டாம். இன்று இரண்டுங் கெட்ட நிலை. பிள்ளைகளுக்குத் தமிழுந் தெரியாது, ஆங்கிலமுந் தெரியாது. மாணவர்கள் சர்வகலாசாலைகளுக்குத் திறனின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும்,

கொழும்பிற் சிறந்த தமிழ் நூல்நிலையம் ஒன்று அத்தியாவசியம். இதுவுந் தமிழ்ச் சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். இக்கட்டடத்துக்குப் பின்னுள்ள பழைய கட்டத்தின் இடத்தில் நூல்நிலையம், வாசிகசாலை, அவைக்களம் முதலியவற்றிற்குத் திட்டமிட்டிருந்தோம். மேற் கூறிய வழக்கினால் இம்முயற்சியுந் தடைப்பட்டது. பன்னிரண்டு வருடத் தடை, பாண்டவர் வனவாசம். இன்று புத்தகங்களை ஓரறைக்குட் பூட்டி வைத்திருக்கிறோம். வாசிகசாலைக்கு இடமில்லை. பலகாலம் புதிய நூல்கள் வாங்கவில்லை. இவ்வழக்கு முடிந்தவுடன் புதிய கட்டடத்தை நிறுவி ஒரு சிறந்த நூல்நிலையத்தை அமைப்பது எமது நோக்கமாகும்.

இன்று அரசாங்கம் சமயத் தாபனங்களுக்கும், பண்பாட்டு நிலையங்களுக்கும் ஊக்கமளிக்கிறது. உதவிகள் செய்கிறது. சலுகைகள் கொடுக்கிறது. பல வருடங்கள் விண்ணப்பஞ் செய்த போதிலும், எமக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வித உதவியுங் கிடைக்கவில்லை. காசுதராவிடினும் இத்தமிழ்ச் சங்கத்தைத் தமிழ்ப் பண்பாட்டு நிலையமாக அங்கீகரித்தாற் போதும், உதவிக்குப் பதிலாக நாம் தடைகளுக்குமேல் தடைகளை அனுபவித்து வருகிறோம். வரி அறவீட்டாளர் எம்மைக் கிளப் - குழுக் களரி என்கின்றனர். கூத்தாடவோ களியாடவோ இங்கு நாம் கூடவில்லை. மாநகர சபை எம்மை வீடு அல்லது விடுதியகம் என வாதாடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவோ அறைகளை வாடகைக்குக் கொடுத்துக் காசுழைக்கவோ இங்கு நாம் வரவில்லை. தமிழ்ச் சங்கம் தமிழர் பண்பாட்டு நிலையம் என்பதையும், அதன் பணி பொது நலம் என்பதையும் மறுபடியும் வற்புறுத்த விரும்புகிறேன்.

இத்தடைகள், சங்கடங்கள் மத்தியில் மனந்தளராது, அயராது உழைத்து வரும் சங்கக் கௌரவப் பணியாளருக்குச் சங்கம் கடமைப் பட்டுள்ளது. எமது கௌரவ செயலாளர் ஆசிரியர் கந்தசுவாமி அவர்களை விசேடமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இவர் பிரமச்சாரி. பெண்டு பிள்ளைகள் தொல்லைகள் இல்லாதவர். தனது முழு நேரத்தையும் தமிழ்ப் பணிக்கு அர்ப்பணித்திருக்கிறார். கனவிலும் இவருக்குத் தமிழ்.

எமது மொழி தமிழ். பண்டைச் செம்மொழிகளில் இன்று வழங்குவது தமிழ் ஒன்றே. பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குகிறது. ஆனால் பழமையைப் பற்றிப் பெருமைப்படுவதனாலோ, தமிழ், தமிழ் என மேடைகளில் முழங்குவதினாலோ பயனில்லை. நம் தமிழ் செந்தமிழ் உலகெலாம் பரவ வேண்டும், வெளிநாட்டவர் மதிக்கத்தக்க புது நூல்களைத் தமிழில் இயற்ற வேண்டும், எமது மொழியின் வளர்ச்சிக்கு உழைக்க முன்வாருங்கள். கடமையைச் செய்யுங்கள். பயனை எதிர்பார்க்காதீர்கள்.

''எண்ணுறும் போது தமிழையே எண்ணீர்
இசைத்துழி தமிழையே இசைப்பீர்
பண்ணுறும் போது தமிழ்ப் பணிதனையே
பழுதறப் பண்ணி யின்புறுவீர்
உண்ணுறும் போதும் உயிர்த்திடும் போதும்
உயிருளம் துடித்திடும் போதும்
கண்ணினும் இனிய தமிழைக் கருதிக்
காரிய வுறுதி கொண்டெழுமின்''
''வாழிய செந்தமிழ் ; வாழ்க நற் றமிழர்''

05-12-1981

**பொ. சங்கரப்பிள்ளை**
தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்டால் அம்ம இவ்வுலகம்
தமக்கென முயலா நோன்றான்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

— புறநானூறு

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

— கணியன் பூங்குன்றனார் — புறநானூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org